
# திராவிடத்தால் வாழ்கிறோம்

912

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

131

# ‘வெற்றி நிச்சயம்!’

## வேலைவாய்ப்பின் வசந்த காலம்!



`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வேலைவாய்ப்பில், மிகப்பெரும் சாதனைகளை நிகழ்த்திக்கொண்டிருக்கும் முத்தாய்ப்பான திட்டங்களில் ஒன்று ‘நான் முதல்வன்’ திட்டம். கற்றல், திறன் மேம்பாடு, வேலை வாய்ப்பு முகாம்கள், வேலைவாய்ப்பு என மாணவர்கள்-இளைஞர்களை, கல்வியில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும் வெற்றி யாளர்களாக்கும் திட்டமாகத் திகழ்ந்து வருகிறது.

2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூன்றாம் ஆண்டு வெற்றி விழா நிகழ்ச்சி கடந்த 01.07.2025 அன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது. அப்போது, தமிழ்நாட்டில் வேலை இல்லாத இளைஞர்கள் யாரும் இருக்கக்கூடாது என ‘வெற்றி நிச்சயம்’ என்கிற புதிய திட்டத்தினையும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

‘நான் முதல்வன்’ திட்டத்தில், கல்லூரிப் படிப்பை முடித்த மாணவர்களுக்குப் பல்வேறு வகைகளில் வேலை வாய்ப்பு முகாம்களை நடத்தி, அவர்களுக்கு ஏற்ற வேலையைப் பெற்றுத்தர உதவுகிறது ‘நான் முதல்வன்-தமிழ்நாடு மாநில அளவிலான வேலைவாய்ப்பு திட்டம்’. அதுபோல வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவ உள்ளது ‘வெற்றி நிச்சயம்’. உணவு, இருப்பிடம், பயிற்சிகளுடன் ரூ.12 ஆயிரம் ஊக்கத்தொகையும் அளிக்கிறது ‘வெற்றி நிச்சயம்’ திட்டம்.

### முன்னணி நிறுவனங்கள்

இந்தத் திட்டத்தின் கீழ், உலக அளவிலான முன்னணிப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை நிறுவனங்களுடன் இணைந்து தொழில் சான்றிதழுடன் பல்வேறு துறைகளிலும் குறுகியகாலத் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சியில், 18 வயது முதல் 35 வயதுள்ள, படித்த, வேலையில்லாத இளைஞர்கள், பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்தியவர்கள் என அனைவரும் பயன்பெறலாம்.

கட்டணமில்லாமல் பயிற்சி வழங்கப்படும். அதேநேரத்தில், பயிற்சியளிக்கும் தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களின் பயிற்சித் தொகையை அரசே முழுவதுமாக ஏற்கிறது. தவிர, சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய வகுப்பினரை மேம்படுத்தும் வகையில், பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு முன்னுரிமை ஊக்கத்தொகையாக ரூ.12,000 வரை அளிக்கப்படும். பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம் ஆகிய ஏற்பாடுகளையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழங்குகிறது.

மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், ஈழத்தமிழர்கள், மீனவ இளைஞர்கள், சிறுபான்மையினர், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு இளைஞர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் என அரசின் நலத்திட்டப் பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்கள் வழியாகக் கண்டறிந்து இத்திட்டத்தில் இளைஞர்கள் இணைக்கப்படவுள்ளனர்.

### 165 பயிற்சிகள்

38 தொழிற்பிரிவுகளில் 165 பயிற்சிகளை 500-க்கும் மேற்பட்ட பயிற்சி நிறுவனங்களின் மூலம் வழங்கப்படவுள்ளன. குறிப்பாக, மாவட்டந்தோறும் உள்ள முக்கியமான தொழில்களைக் கண்டறிந்து, அது தொடர்பான பயிற்சி நிறுவனங்கள், தொழில் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த திறன் பயிற்சி முன்னெடுப்புகள் மூலம் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ், பயிற்சி அளிக்க இசட் எஃப் ரானே, டி.வி.எஸ்.சப்ளை செயின், செயண்ட் கோபைன், டி.ஐ.முருகப்பா குழுமம் டெக் மஹிந்திரா, அமேசான் வெப் சர்வீஸ் (*ZF Rane TVS Supply chain, MRF, Saint Gobain, TI Murugappa Groups, Brakes India, Tech Mahindra Foundation, Tata Electronics, Groom India Salon & Spa, LG, Ashok Leyland, Asahi India Glass Limited, Apollo, Amazon Web Services, Tally* ) உள்பட முன்னணி நிறுவனங்களிடமிருந்து திறன் பயிற்சி அளிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பயிற்சிக்குப் பின்னர், அந்த நிறுவனங்களில் அவர்களின் வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படுவதால் ‘வெற்றி நிச்சயம்’.

இதில், பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டு தரமான பயிற்சிகள் வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் ஜெர்மன் உள்ளிட்ட மொழிகளிலும் பயிற்சிகள் அளிக்கப்படும். அதன்மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகள் உருவாகவுள்ளது.




Big Data, Internet of Things, Robotics, Artificial Intelligence, Machine Learning, Industry 4.0, Robotics, Building Information Modelling போன்ற துறைகளில் தொழில்நுட்ப நிபுணர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



### கைபேசி செயலி

இந்தத் திட்டத்தில் சேர்வதை எளிதாக்கும் வகையில், *Skill Wallet* என்ற பிரத்தியேக கைபேசி செயலி (*Mobile App*) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயலி மூலம், மாணவர்கள் தாங்கள் விரும்பும் திறன் பயிற்சியைப் பதிவு செய்யும் வகையில், தேவையான அனைத்துத் தகவல்களும் இடம் பெற்றுள்ளன. வளர்ந்து வரும் தொழில்துறைக்கு ஏற்ப, இளைஞர்கள் தாங்கள் விரும்பும் மிகப்பெரிய நிறுவனங்களின் வேலைவாய்ப்பைச் சுலபமாக்குகிறது ‘வெற்றி நிச்சயம்’.

நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த திறன் பயிற்சிகளையும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த திறன் பயிற்சிகளையும், சிறந்த நிறுவனங்கள் மூலமாக பெறுவதற்கும், வேலை தேடும் இளைஞர்களுக்கு வேலையை எளிதாக்கும் வகையிலும் அமையும். பயிற்சி காலத்திலேயே எந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பு உள்ளது என்னவென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

நகர்ப்புற மாணவர்களின் திறன்களுக்கு இணையாக, ஊரகப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களின் திறன்களை எவ்வித செலவுமின்றி உயர்த்துவதற்கு உலகளாவிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது தமிழ்நாடு அரசு.

தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளதாக சமீபத்திய தரவுகள் சொல்கின்றன. அதை முதலிடத்துக்கு நகர்த்தும் முயற்சிதான் ‘வெற்றி நிச்சயம்’. கல்வி பெற்ற தலைமுறையை உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். நல்ல வேலை, நல்ல வருமானம் என அடுத்த கட்டத்துக்கு நகர்த்திக் கொண்டிருக்கிறார் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

> “கல்வி பெற்ற தலைமுறையை உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். நல்ல வேலை, நல்ல வருமானம் என அடுத்த கட்டத்துக்கு நகர்த்திக் கொண்டிருக்கிறார் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.”

...சாதனை தொடரும்

## மோடிக்குப் பாடம் எடுத்த மொய்சு!

பிரதமர் மோடி, தான் செல்லும் நாடுகளில் எல்லாம் இந்தியில் பேசுவதையே வழக்கமாக வைத்துள்ளார். சமீபத்தில், மாலத்தீவு நாட்டின் விடுதலை நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு, அங்கும் இந்தியில்தான் பேசினார். அதுகுறித்து, மூத்த பத்திரிகையாளர் டி.வி.சோமு, சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள கருத்து கவனிக்கத்தக்கது.

“இந்திய ஒன்றிய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு மேலான உதவியை மாலத்தீவுக்கு அறிவித்து உள்ளார். இரு நாடுகளுக்கும் இடையே சமீபத்திய முரண்பாடுகளுக்குப் பிறகு இந்தப் பயணம். ஆனால், அங்கும் ஒரு விமர்சனத்தை ஏற்படுத்தி இருக்கிறார் மோடி.

அங்கே இந்தியில் உரையாற்றினார். ஆனால், மாலத்தீவு அதிபர் மொய்சு, தெளிவான ஆங்கிலத்தில் உரையாற்றினார். இத்தனைக்கும், மாலத்தீவு நாட்டில் ஆகப்பெரும்பாலோர், கிட்டதட்ட அனைவரும் பேசும் ஒரே மொழி, திவேதி. ஆனாலும், மொய்சு, அனைவருக்கும் புரியும்படியாக ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

இந்தியாவில் 121 மொழிகள் பேசப்படுகின்றன. நவீன இந்தியைப் பேசுபவர்கள் சுமார் 25 சதவிகிதம்பேர்தான். ஆனால், இந்திய ஒன்றிய தலைமை அமைச்சர், இந்தியில் உரையாற்றுகிறார். தனது நாட்டின் ஒரே மொழியை விடுத்து, ஆங்கிலத்தில் பேசுகிறார் மொய்சு. காரணம், தனது கருத்து உலக மக்களை எளிதில் அடைய வேண்டும் என்பதற்காக. ஆனால், பல மொழிகள் புழக்கத்தில் உள்ள நாட்டின் தலைமை அமைச்சர் அங்கே(யும்) யாருக்கும் புரியாத - இந்தியில் பேசுகிறார்.

இதனால், ‘இந்தியாவின் மொழி இந்தி மட்டுமே’ என்கிற தவறான எண்ணத்தை உலக மக்களிடம் ஏற்படுத்தும். தவிர, அவரது (இந்தியாவின்) கருத்து எளிதில் அனைவரையும் சென்றடையாது. இதைத் தொடர்ந்து செய்துவருகிறார் மோடி” என பதிவிட்டுள்ளார் அவர்.

## ஃப்ளாஷ்பேக்





மணா

## “சரளைக் கற்கள் நிரம்பிய பாதை!”

1999-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நேரம், அப்போது முதலமைச்சர் கலைஞரிடம் நான் கண்ட பேட்டி, ஒரு வார இதழில் வெளியாகி, 26.08.1999 முரசொலியில் மறுபிரசுரமானது. அந்தப் பேட்டியில், ‘உங்களுக்குள் இருந்த கனவும், எதிர்பார்ப்பும் பவள விழாவைக் கடக்கிற இந்த வயதில் நிறைவேறியிருப்பதாக நினைக்கிறீர்களா?’ என ஒரு கேள்வி கேட்டிருந்தேன். “வீசுகிற புயல், பெய்கிற மழை, இவற்றுக்கிடையே சரளைக் கற்கள் நிறைந்த குன்றின் மீது வைப்பதற்கு, ஒரு கரத்தால் விளக்கை ஏந்திக் கொண்டு, இன்னொரு கரத்தால் அதனை அணையாமல் காத்துக் கொண்டு ஏறிச் செல்கிற முயற்சியில் இன்னமும் முழு வெற்றி கிடைக்கவில்லை” என்றார். அந்த பதில்தான் அவர் காலத்தைக் குறிக்கும் கல்வெட்டு.

– மணா, மூத்த பத்திரிகையாளர்
சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கவனிக்கப்பட்ட தேர்தல் அறிக்கை!

1957-ஆம் ஆண்டு, வெளியிடப்பட்ட தி.மு.க. தேர்தல் அறிக்கையில், சுய நிர்ணய உரிமை வேண்டும், அரசியல் சமத்துவம் வேண்டும், மத்திய ஆட்சி அதிகாரங்களுக்கு வரம்பு வேண்டும், தொழில்கள் தேசியமயமாக வேண்டும், ஐந்தாண்டுத் திட்ட அநீதி ஒழிய வேண்டும், அதிகபட்ச ஊதியத்திற்கு வரம்பு, நிலச்சீர்திருத்தம், விவசாய முன்னேற்றம், மீன் வளர்ப்பு, தாய்மொழியில் கல்வி, சமவேலைக்குச் சம ஊதியம், கைத்தறிக்குப் பாது காப்பு என பல தலைப்புகளில் விரிவாகப் பேசியிருந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131